ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2473/07 - 2026 ජනවාරි මස 26 වැනි සඳුදා - 2026.01.26

2473/07 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/LG/LND/2/අත්පත් කරගැනීම 344-380.
காணி அமைச்சின் இல.: 4-3/7/2010/HW/225.

பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டியதாக இருக்கின்றதென்றும் கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் 94G, சுமுதுகம கிராம அலுவலர் பிரிவில் மாபா எல்ல கிராமத்தில் இ.கி.வ. 535 இல், பிற்சேர்க்கை இல. 7 இல், தாள் இல. 7 இல் துண்டு இல. 289, 292, 293 மற்றும் 294 ஆகியவற்றின் எல்லை விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 289 - காணியின் பெயர்: சோலன்ட்ஸ் தோட்டம்; விபரம்: தோட்டம் (5 - 10 வயதுடைய கலப்பினத் தாவரங்கள் காணப்படுகின்றன); உரிமை கோருபவர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0138 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 250, 277 மற்றும் 290; கிழக்கு: துண்டு இல. 290; தெற்கு: துண்டு இல. 24, 285 மற்றும் 287; மேற்கு: துண்டு இல. 285, 287 மற்றும் 250.

02. **துண்டு இல. 292 - காணியின் பெயர்: குறிப்பிடப்படவில்லை; விபரம்: தோட்டம் (5 - 10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படுகின்றன); உரிமை கோருபவர்: அரசு, சட்டபூர்வமான**

**விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்ட யார்**

வடக்கு: துண்டு இல. 291, 72 மற்றும் 293; கிழக்கு: துண்டு இல. 293; தெற்கு: துண்டு இல. 293 மற்றும் 290; மேற்கு: துண்டு இல. 290 மற்றும் 291.

03. **துண்டு இல. 293 - காணியின் பெயர்: பொல் லெத்தேவெல தோட்டம்; விபரம்: தோட்டம் (5 - 10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படு கின்றன); உரிமை கோருபவர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆவது அத்தியாயத்தின் (அ) இடைக்கால உத்தரவின் கீழ் கைப்பற்றப்பட்டது. ஆரம்ப உரிமை கோருபவர்: செனவிதிஸ்ஸபுர, லுணுகலையில் வசிக்கும் விமலரத்ன லியனவிக்ரம சிங்க, பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்ட யார்**

வடக்கு: துண்டு இல. 72; கிழக்கு: துண்டு இல. 72 மற்றும் 294; தெற்கு: துண்டு இல. 294, 290 மற்றும் 292; மேற்கு: துண்டு இல. 290, 292, 291 மற்றும் 72.

04. **துண்டு இல. 294 - காணியின் பெயர்: பொல் லெத்தேவெல தோட்டம்; விபரம்: தோட்டம் (5 - 10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படு கின்றன); உரிமை கோருபவர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆவது அத்தியாயத்தின் (அ) இடைக்கால உத்தரவின் கீழ் கைப்பற்றப்பட்டது. ஆரம்ப உரிமை கோருபவர்: செனவிதிஸ்ஸபுர, விகாரை, பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்ட யார்**

வடக்கு: துண்டு இல. 293 மற்றும் 72; கிழக்கு: துண்டு இல. 72 மற்றும் இ.கி.வ. 536 (கொட்டல்பெத்த மெதகங்கொட); தெற்கு: இ.கி.வ. 536 (கொட்டல்பெத்த மெதகங்கொட) மற்றும் துண்டு இல. 290; மேற்கு: துண்டு இல. 290 மற்றும் 293.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு லுணுகலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணி யில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சி. புவனேந்திரன்,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2026, சனவரி 21.

EOG 01 - 0262

---

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GCF/ATH/KL/03/LA.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 03J/91/
LRB/108.

1997.10.03 ஆந் திகதிய 995/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் கீழ் என்னால் பிரசுரக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தப் படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொலொன் னாவை பிரதேச செயலாளர் பிரிவில் கலப்பழுவாவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஷை:7293 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 0.4899 ஹெக்டயார் முழு விஸ்தீரணம் என்பது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக 0.4898 ஹெக்டயார் முழு விஸ்தீரணம் எனப் பதிலீடு செய்யப்பட்டுத்

திருத்தப்படுகிறது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பாரிய கொழும்பு வெள்ளப்
பெருக்கைக் கட்டுப்படுத்தல்
மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்
கருத்திட்டம்.
கொலொன்னாவை பிரதேச
செயலாளர் பிரிவு.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக்
கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்
கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல்
அலுவலகம்.
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2026, சனவரி 19.

EOG 01 - 0263